**செய்தி வெளியீடு எண்: 552** **நாள் : 11.10.2013**

**<u>செய்தி வெளியீடு</u>**

**ஃபீடே உலக சதுரங்க வாகையர் போட்டி 7–11–2013 முதல் 26–11–2013 சென்னையில் நடைபெறுவதையொட்டி முன்னேற்பாடு பணிகளை மேற்கொள்ள அமைக்கப்பட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் மூன்றாவது கூட்டம் இன்று (11–10–2013) சென்னை பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கில் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சரும், ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான திரு பி. பழனியப்பன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சென்னையில் இவ்வருடம் நவம்பர் மாதம் 7–11–2013 முதல் 26–11–2013 வரை ஃபீடே உலக சதுரங்க வாகையர் போட்டி (FIDE World Chess Championship) தற்போதைய உலக சதுரங்க வாகையருமான கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த் மற்றும் தற்போதைய உலகத்தர வரிசையில் முதல் சதுரங்க வீரராகவும், சர்வதேச சதுரங்க கூட்டமைப்பு தரவரிசைப் பட்டியலில் இதுவரை உயர்ந்த அளவில் 2872 புள்ளிகள் பெற்று முன்னிலையில் உள்ள நார்வே நாட்டைச் சார்ந்த திரு மேக்னஸ் கார்ல்சன் (Mr. Magnus Carlsen) ஆகியோருக்கிடையே நடைபெறும் என்று அறிவித்து, இதற்கென ரூ.29 கோடி நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 13–9–2013 அன்று உலக சதுரங்க வாகையர் போட்டியினை சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் நடத்திட செய்து வரும் பணிகள் குறித்த ஆய்வுச் செய்து தக்க அறிவுரைகளையும், வழிகாட்டுதலையும் அளித்துள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்பேரில் ஃபீடே உலக சதுரங்க வாகையர் போட்டியினை நடத்துவதற்குரிய முன்னேற்பாடு பணிகளை மேற்கொள்ள, ஒருங்கிணைக்க அமைக்கப்பட்ட குழுவின் முதல் கூட்டம் 9–7–2013 மற்றும் இரண்டாவது கூட்டம் 20–8–23013 அன்று ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் தலைமையில் நடைபெற்றது. இரண்டு கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி, பணிகள் சிறப்பாகவும், விரைவாகவும் மேற்கொள்ளப்பட்ட விவரங்கள் குறித்து, இன்று (11–10–2013) நடைப்பெற்ற மூன்றாவது கூட்டத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், உலக சதுரங்க வாகையர் போட்டியின் தொடக்க விழாவினை சிறப்பாக நடத்துவதற்குரிய பணிகளை மேற்கொள்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. ஃபீடே உலக சதுரங்க வாகையர் போட்டி (FIDE World Chess Championship) நடைபெறுவதை முன்னிட்டு தமிழகம் முழுவதும் பள்ளிக் கல்வித் துறை, தமிழ்நாடு மாநில சதுரங்க கழகம் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் சதுரங்க விளையாட்டு போட்டிகளின் நிலவரங்களை ஆய்வு செய்தார்கள்.

இக்கூட்டத்தில் ஒருங்கிணைப்புக் குழுவின் உறுப்பினர்களான அரசு தலைமைச் செயலாளர், திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., அரசு முதன்மைச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, திரு முகம்மது நசீமுத்தீன், இ.ஆ.ப., அரசு முதன்மைச் செயலாளர் / உறுப்பினர் செயலாளர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், திரு க. ராஜாராமன், இ.ஆ.ப., அரசு முதன்மைச் செயலாளர், நிதித் துறை, திரு க. சண்முகம், இ.ஆ.ப., அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, திருமதி த. சபிதா, இ.ஆ.ப., அரசுச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, திரு க. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., அரசுச் செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, முனைவர் மு. ராஜாராம், இ.ஆ.ப., பொதுப் பணித்துறையின் முதன்மை தலைமைப் பொறியாளர், திரு. ஆர். கோபாலகிருஷ்ணன், அகில இந்திய சதுரங்க விளையாட்டுக் கழகத்தின் தலைவரும் மற்றும் சிட்கோவின் தலைவருமான திரு ஜே.சி.டி. பிரபாகர், எம்.எல்.ஏ., சர்வதேச சதுரங்க கூட்டமைப்பின் துணைத் தலைவர், திரு டி.வி. சுந்தர், தமிழ்நாடு மாநில சதுரங்க விளையாட்டுக் கழகத்தின் தலைவர் திரு பி.ஆர். வெங்கட்ராம ராஜா ஆகியோர் பங்கேற்றார்கள்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**